ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2327/02 - 2023 අප්‍රේල් මස 10 වැනි සඳුදා - 2023.04.10

2327/02 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: AKU/LAN/06/LA87.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/5/2020/HA/77.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் வெலிகம கோறளை (வடக்கு) சிறு பிரிவின் போபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட முற் பிரதிப்பட இலக்கம் மாற 551 படத்தில் மேலதிக இல. 10 மற்றும் தாள் இல. 14 இல் இறுதிக் கிராமப் படத்தில் காட்டப்பட்டுள்ள பின்வரும் காணிப் பகுதியின் எல்லைகள் :

**01. துண்டு இல. 226 - ஒலொல் கஹவத்த வலுலக் கஹவத்த; விஸ்தீரணம்: சுமார் 0.0263 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 18; கிழக்கு : துண்டு இல. 18; தெற்கு : துண்டு இல. 18; மேற்கு : துண்டு இல. 18.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே.ஜீ.டீ. அநோஜா,
பிரதேச செயலாளர்,
அக்குரஸ்ஸ.

பிரதேச செயலகம்,
அக்குரஸ்ஸ,
2023, ஏப்பிறல் 03.

EOG 04 - 0076



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*